**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அம் முறைமைகள், செயன்முறைகள், புத்தகங்கள், பதிவுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் வினைத்திரனுடன் பயன்படுத்தப்பட்டது எனவும்

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் துணைக்கம்பனிகளுடனான உள்ளக கம்பனி மீதிகள் இணக்கஞ் செய்யப்படவில்லை. | கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மீதான எழுதப்பட்ட தகவல் கண்டுபிடிப்புக்கள் ஒரு பிரச்சனையாக ஆகி இருந்தது. | அதிகாரசபையின் துணைக்கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகள் மீது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் நேர அடிப்படையிலான இணக்கஞ் செய்யப்படல் வேண்டும். |

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கனகீட்டு நியமங்களுடன் இணக்கமின்கை.

| உரிய நியமங்களின் குறிப்புரைகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கணக்கீட்டு அலகு எண்ணக்கரு மற்றும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம இல 01 இன் நிபந்தனைகளுக்கு அமைய, மகநெகும மகமதுர விடமிருந்தான 72,400 சதுர அடி கொண்ட கட்டிடம் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சினால் பயன்படுத்தப்படுவதுடன் அதனுடன் தொடர்புபட்ட கிரயம் பெறுமதி ரூபா 496.57 மில்லியன் மற்றும் வருட தேய்மானப் பெறுமதி ரூபா 24.83 மில்லியன் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அது தெரிவிக்கின்றது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இன் பிரகாரம், முதன்மை பெறுமதி மற்றும் அதன் தேய்மான பெறுமதி என்பன வரிசை அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட மகநெகும மகமதுரவின் தரைப்பகுதி அடிப்படையிலான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) மகநெகும மகமதுர கட்டிடத்திலுள்ள முதல் 3,580 சதுர அடியுடைய விரிவுரை மண்டபம் பயன்படுத்துவதற்கு தயாராக இல்லை, இது பொதுத் துறை கணக்கீட்டு நியம இல 01 இன் பிரகாரம் ஒரு சொத்தாக அடையாளப்படுத்த முடியாது. ஆனால் அது ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 25.7 மில்லியன் பெறுமதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இதனை ஒரு வரவேற்பு மண்டபமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன் தற்போது ஒரு தற்காலிக களஞ்சியமாக பயன்படுத்தப்படுகின்றது. | தொடர்புடைய கட்டிட தொகுதிகளை அவைகளின் உரிய நோக்கத்திற்காக பயன்படத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேய்மானத்திற்காக முறையான ஒரு பொறிமுறை பின்பற்றப்படலும் வேண்டும். |
| (இ) ரூபா 80.8 மில்லியன் கிரயத்திலான தெலகபந்த பொலிஸிற்காக கட்டப்பட்ட கட்டிடம் மீது ஒரு வருடத்திற்கு ரூபா 4.04 மில்லியன் பெறுமதி தேய்மானம் செய்யப்பட்டிருப்பினும், இக் கட்டிடங்கள் மற்றும் இணைந்த தேய்மானம் என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபை அவைகளிலிருந்து நேரடி பயனை அடையாததாக பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 உடன் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. | தெலகபத்த கட்டிடம் நெடுஞ்சாலை செயற்பாடுகளிற்காக ஒரு பொலிஸ் பதவி பலநோக்கு கட்டிடமாக நிறுவப்பட்டிருந்தது. இருப்பினும், எதிர்காலத்தில் தொடர்புடைய தரப்பினருடனான கலந்துரையாடலுடன் ஒரு கொள்கை தீர்மானம் எடுக்கப்படும் என அது அறிவிக்கிறது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபா 161,500 பெறுமதியான தேய்மானம் அதிகார சபையின் சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 3.23 மில்லியன் பெறுமதியான காணிகளிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான அதன் திரண்ட தேய்மானம் ரூபா 2.43 மில்லினாக இருந்தது. | இந்த பந்தியில் உள்ள விடயங்களுடன் உடன்பாடு இல்லை. காணி தேய்மானம் செய்யப்பட்டிருக்கவில்லை. ஒரு நபரினால் பட்டியலில் ஒரு காணியாக குறிப்பிடப்பட்ட தகவல்களை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காணிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 177 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணமாக தேய்மானமிடப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 மற்றும் 7 இன் பிரகாரம் அவைகளுடைய பயன்தரு ஆயுட் காலத்தினை மதிப்பாய்வு செய்வதற்கு மீள்மதிப்பீடு அல்லது மீள்பெறுமதியிட படிமுறைகளை மேற் கொண்டிருக்கவில்லை. | இக்கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்படுமானாலும் எதிர்காலத்தில் சிலவற்றை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 மற்றும் 07 உடன் இணக்கம் செய்க. |
| (ஊ) ரூபா 71.15 மில்லியன் கிரயமான வீடமைப்பு மற்றும் அலுவலக கட்டிடங்கள் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கட்டம் II இனால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 2018 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இச்சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விபரமான தகவல்கள் இது தொடர்பான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் 2019 ஜுன் 12 ஆம் திகதியிடப்பட்ட நிதிப்பிரிவின் பணிப்பாளரின் ஆர்டிஏ/எப்டி/எப்ஏஎஸ்/12 ஆம் இலக்க கடிதத்தினால் இச் செயற்திட்டத்திலிருந்து திரும்பப்பெறப்பட்டிருந்தது கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கட்டிடங்களை கணக்கிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) ரூபா 5,129.5 மில்லியன் கிரயமான அதிகார சபையின் ஆய்வுகூடம் மற்றும் உபகரணங்களின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான கீழ் கொண்டுவரும் பெறுமதி ரூபா 68.2 மில்லியனாக இருந்தது. இச் சொத்தின் குறிப்பிட்ட அளவு சதவீதம் அதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தில் முடிவடைந்திருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 மற்றும் 07 இன் பிரகாரம் இச் சொத்துக்களை மீள் பதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களினதும் மீள் மதிப்பீட்டிற்காக ஒரு முறையான பொறிமுறை தயாரிப்பதனூடாக எதிர்வரும் வருடங்களில் தவணை அடிப்படையில் மீள் மதிப்பிடளை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என அது அறிவிக்கின்றது. | உரிய சொத்துக்களை மீள்மதிப்பிட அல்லது மீள் தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான பொறி மற்றும் உபகரண மானியங்கள் மற்றும் தளபாடம் மற்றும் பொருத்துகைகளின் பெறுமானத்தேய்வு தொடர்பாக நிதிக்கூற்றுக்களிற்கும் சொத்து பதிவேட்டிற்கும் இடையே ரூபா 53.7 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறி உபகரணங்கள் மற்றும் மானியங்கள் மற்றும் பெறுமானத்தேய்வின் ஒதுக்கீட்டு மீதிகளின் பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படல் வேண்டும் என அது அறிவித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அவ் பெறுமானத் தேய்வுகளிற்கு தொடர்புடைய சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சீராக்கம் செய்து அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (ஐ) ரூபா 1,787 மில்லியன் பெறுமதியான 417 வாகனங்களின் கிரயம் 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. இச் சொத்துக்களை மீள் மதிப்பிடவும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் காட்டப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர பிரிவின் பட்டயம் பெற்ற பொறியியலாளர்களின் தொழில் ரீதியாக தகமை பெற்ற குழு ஏற்கனவே மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜூலை யிலிருந்து மாதாந்த கணக்குகளில் சீராக்கங்கள் செய்யப்படும் என அறிவித்திருந்தது. | பொது கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வாகனங்களுடன் தொடர்புடைய சீராக்கங்களை செய்க. |

## 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அறவிடமுடியாக்கடன் கொள்கையானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெளிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இக் கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கைகளால் பராமரிக்கப்பட்ட ஏ , பீ மற்றும் ஏபீ தர வீதிகளின் 12,180 கி.மீ கள் நிதிக் கூற்றுக்களின் அவைகளின் நீளம், பரப்பளவு அல்லது பெறுமதிகளை வெளிப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் மீளாய்வாண்டின் போது 03 வீதிகளின் ரூபா 7,508 மில்லியன் கிரயத்தை மூலதனமாக்க படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன. | வீதிகளின் பெறுமதியை கணிப்பிடவும் இக் கொள்கைகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் ஒரு பொருத்தமான கணக்கீட்டு கொள்கையை அடயாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) வெளிநாட்டு உதவி வகையின் கீழான வாகனங்களின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 7.03 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது ஆனால் கணிப்பீட்டின் பிரகாரம், அது ரூபா 16.07 மில்லியனாக இருக்க வேண்டும். ஆகவே ரூபா 9.04 மில்லியன் வருடாந்த பெறுமானத் தேய்வில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | முதல் இவ் வாகனம் வீசேட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலம் 10 வருடங்கள் ஆகும். ஆகவே 10 சதவீதமான பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான கணக்கீட்டு கொள்கை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபையில் நிதிக் கூற்றுக்களில் பிரகாரம் ரூபா 283 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய கடன் மீதிகள் 05 வருடங்களிற்கு மேலாக மீதமாக இருப்பினும், ரூபா 168,831 மாத்திரமே அறவிடமுடியா கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | அறவிடமுடியா கடன் ஏற்பாடுகள் 2015 ஆம் ஆண்டுமுதல் செய்யப்பட்டிருக்கவில்லைஇ அதில் மொத்தமாக ரூபா 281 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக இருந்ததுடன் அந் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2018 இல் பெறப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் வழங்கப்படாத காலத்தை கருத்தில் கொண்டு சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம, கடுவெல தொடக்கம் கடவத்த வரையான விதிப்பிரிவின் கிரயம் மொத்தமாக ரூபா 47,819 மில்லியன் ஆக இருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அதன் கிரயம் 47,824.9 மில்லியனாக இருந்தது வேறுபாடு ரூபா 5.9 மில்லியனாக இருந்தது. | வேறுபாடுகளுடன் தொடர்புடைய சீராக்கங்கள் நாட்குறிப்புகள் பதிவுகள் மூலம் 2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகள்சீராக்கப்பட வேண்டியதுடன் தேவையான ஒப்பீடுகளும் செய்யப்பட வேண்டும். |
| (இ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமஇ தெற்கு அதிவேகப்பாதையின் கிரயம் ரூபா 113,709.7 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் அது 116,347.2 மில்லியனாக இருந்தது ஆனலும் ரூபா 2,637.5 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளுடன் தொடர்புடைய சீராக்கங்கள் நாட்குறிப்புகள் பதிவுகள் மூலம் 2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகள்சீராக்கப்பட வேண்டியதுடன்தேவையான ஒப்பீடுகளும் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த தலைமை காரியாலய கட்டிடத்தின் பெறுமதி மற்றும் அமாத்தமாக ரூபா 208.78 மில்லியன் பெறுமதியான கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் சொத்துக்கள் கட்டிடங்களின் கிரயங்களின் கீழ் மேலும் மீதமாக இருந்தன. | இதில் மொத்தமாக ரூபா 175.8 மில்லியன் 2019 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்ததுடன் மிகுதி எதிர்வரும் வருடத்தில் சீராக்கப்படும் என அறிவிக்கப்பட்டது | முறையாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (உ) பொரெல்ல மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள அதிகாரசபையினால் உரிமையாக்கப்பட்ட 37 கடைகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டியதுடன் அதனுடன் நியாயமான ஒரு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படலும் வேண்டும். |
| (ஊ) வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழாக கொள்வனவு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 9.1 மில்லியன் பெறுமதியான 112 ஆய்வுகூட உபகரணங்கள் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலின் பின்னர் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட பீடாதிபதிக்கு நன்கொடை அளிக்கப்பட்டிருப்பினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்து மீதி புத்தகங்களில் இருந்து பதிவளிக்கப்படாததன் காரணமாக அப் பெறுமதியினால் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | இது தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறையை பலப்படுத்த படிமுறைகள் எடுக்க வேண்டும். |
| (எ) இடம் பெயர்ந்த நபர்களின் மீளச் செலுத்தும் எண்ணத்துடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அத்திட்டிய காணியிலிருந்தான காணியின் மொத்தமாக ரூபா 123 மில்லியன் பெறுமதியான 02 ரக்கர் 03 ரூட் 38 பேர்ச்சஸ் பரப்பளவு ‘‘நிபுன்தபியச’’ விற்கு வழங்கப்படடிருந்த போதிலும், அதற்காக பொருத்தமான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் செய்யப் பட்டிருக்கவில்லை. | புதிய களனி பாலத்தின் நிர்மானிப்பிற்காக அக் காணி கொள்வனவு செய்யப்பாட்டிருந்த போது, சுமார் ஒரு ஏக்கர் ‘‘நிபுன்த பியசாவின்’’ மானில உரிமை நிறுவனங்களிற்கு சொந்தமான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இக் காணி அக் காணிகளிற்கு பதிலாக வழங்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க. |
| (ஏ) 2018 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்ட வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் தின் மொத்தமாக ரூபா 795 மில்லியன் சொத்துக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. ரூபா 8.2 மில்லியன் தொகையான காணி அம்மாற்றப்பட்ட சொத்துக்களிற்குள் | பெறுமதியை மதிப்பிடவும் அதிகாரசபையின் கணக்குகளில் எடுத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | அதிகார சபைக்கான செயற்திட்டங்கள் மற்றும் முறையான கணக்கீடுகளிலிருந்து சொத்துக்களை மாற்றீடு செய்தல் மீது உள்ளக கட்டுப்பாடொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டிருப்பினும், இக் காணிகளின் பெறுமதி அதிகாரசபையின் கனக்குகளில் எடுத்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் (எஸ்டீடிபி) மற்றும் அதன் நீபொன் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் (ஓசிஎச்) ஆகியவற்றினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தலைமை உறுதியுடன் மாற்றப்பட்டிருந்த 10 காணித்துண்டுகள் மற்றும் இலவச மானியங்களிருந்து பெறப்பட்டிருந்த 02 காணித்துண்டுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் நிலையாக்கப்பட்டிருப்பினும், அதிகார சபையின் புத்தகங்களின் அவைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை. | இவ் இரு காணிகளும் நடைமுறை ஆண்டின் ஜூலையில் நாட்குறிப்பு குறிப்புகள் இல 237/ஜ07 இனுடாக கணக்கிடப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டது. | சொத்துக்களின் கணக்குகளை ஒர்வரிசைப்படுத்தவும் அதன் மீது உள்ளக கட்டுப்பாடை சீராக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) காணிகள் பரிமாற்றுதலினூடாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பெறப்பட்டிருந்த டென்சில் கொபேகடுவ வீதியில் அமைந்துள்ள கருத்தில் கெள்ளப்பட்ட காணிகளின் கொடுப்பனவிற்காக செலுத்தப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 50 மில்லியன் ஒரு தடவை ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை காலத்தின் பிரகாரம் மூலதனமாக்கவும் தேய்மானமிடப்பட்டிருக்கவுமில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இது ஒரு செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தமான பின்பு அதன் மீளப் பெறமுடியாத கிரயத்துடனான ஒரு சொத்தாக கருத்தில் கொள்ள முடியாது. | அதிகார சபையானது குத்தகை நிபந்தனைகளின் மேல் இப் பெறுமதிக்கு பெறுமானத் தேய்விடல் கட்டாயமாகும். |
| (ஓ) 2019 ஆம் ஆண்டின் செலவினங்களின் முதல் 03 மாதங்களிற்குள் வீதி அபிவிருந்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வரையறுத்த கணக்காய்வின் போது குறைந்துக் காட்டப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டுடன் தொடரப்பட்ட செலவுகளுடன் கூட்டி காட்டப்பட்டிருந்த இலாபம் மொத்தமாக ரூபா 26.05 மில்லியன் இவ் ஆண்டிற்காக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | உரிய திணைக்களங்களிடமிருந்து கணக்கிடப்படாத அட்டுறு செலவுகளை விரைவாக கொண்டுவருவதன மூலம் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நெருங்கிய கவனத்தை செலுத்த உரிய அதிகார சபைகளிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உரிய ஆண்டிற்கான தொடர்புடய செலவுகள் மற்றும் வருமானங்களை அதே ஆண்டில் அடயாளப்படுத்த உள்ள செயன்முறையை வழுப்படுத்தல். |
| (ஔ) 2018 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 57.65 மில்லியன் கிரயமுடய 11 வாகனங்கள் சொத்துக்களிள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனுடன் தொடர்புடய ரூபா 7.7 மில்லியன் தொகையான பெறுமானத் தேய்வு கூட கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடப்படாத 04 வாகனங்களை தொடர்புபடுத்தி முன்னய ஆண்டின் இலாபம் மொத்தமாக ரூபா 2.08 மில்லியனை ஒரு பெறுமானத் தேய்வாக சிராக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | செயற்திட்டங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் சொத்துக்களின் உள்ள கட்டுபாட்டு செயன்முறையை வழுப்படுத்தபடுவதுடன் அதற்கிணங்க கணக்கீடும் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (க) 2017 ஆம் ஆண்டின் சேர்மானங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 9.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனம் 2018 ஆம் ஆண்டின் சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் வாகனம் சொத்து பதிவேட்டிலிருந்து தவறுதலாக நீக்கப்பட்டிருந்ததுடன் அதனை சோதனை செய்த பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். |
| (கா) 2018 ஆம் ஆண்டில் சேர்மானங்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 114.0 மில்லியன் கிரயமான பன்னிரெண்டு வாகனங்கள் 2017 மே 16 இல் பெறப்பட்டதாக பதியப்பட்டிருந்தது, மேலும் அத்திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 வரை முழு பெறுமானத்தேய்வு பெறுமதி 2018 ஆம் ஆண்டிற்காக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு தொகை பொருன்மையானதாக இல்லாதது முதல், 2017 ஆம் ஆண்டிற்காக சீராக்கப்படாமல் 2018 இல் சீராக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் பொருண்மைத்தன்மை தொடர்பான தீர்மானம் எடுப்பதனூடாக உரிய கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கி) நெடுஞ்சாலையின் நிர்மானத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 245,769 மில்லியன் தொகை குடியரசு கணக்கில் ஒரு கடனாக வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் அதிகார சபையின் கணக்குகளில் அரசாங்க மானியமாக கணக்கிடுவதன் அடிப்படை கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான கொடுப்பனவை செய்ய அதிகார சபை பொறுப்புடையதல்லாததுடன் நெடுஞ்சாலை காரணமாக ஒரு சொத்தாக நடாத்தப்படுகின்றது. | ஒரு அரசாங்க மானியமாக காட்டுவதற்கு திரைசேரியிடமிருந்து உரிய சாட்சிப்படுத்தும் ஆவணங்கள் பெறப்பட்டிருக்க வேண்டும். |
| (கீ) அதிகார சபையின் உள்ளக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம், பல்வேறு செயற்திட்டங்களினால் நிர்மானிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான அலுவலக கட்டிடங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுதிகள் அதிகார சபையின் சொத்துப்பதிவேடு அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தகவல்கள் உரிய செயற்திட்டங்களிடமிருந்து ஏற்கனவே திரும்பப்பெறப்பட்டிருந்ததுடன் தகவல் கிடைக்கப்பெற்ற பின்னர் எதிர்காலத்தில் அதற்காக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான கணக்கீட்டு செயன்முறைகளை பின்பற்ற கணக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (கு) கொழும்பு மாத்தறை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 0.8218 மற்றும் 6.4085 ஹெக்டார் காணிகளின் விஸ்தரிப்பினை மீளாய்வாண்டில் மூலதனமாக்க வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையானது கணக்கீட்டு கொள்கைகள் காணிகள் சட்டரீதியான உரிமைத்துவம் உறுதி மூலமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டதற்கு கணக்கு வைக்கப்படவில்லை. உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் அதற்காக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவ்வாறான காணியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கூ) கணக்காய்விற்காக வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம், பெறுமதி இல்லாத 661 வாகனங்கள் காணப்பட்டன. | நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு வழங்கப்பட்ட பட்டியல்களுடன் பரீட்சிக்கும் போது, பெறுமதி இல்லாத 661 வாகனங்கள் இருந்ததுடன் இவ் வாகனங்களை மீள்மதிப்பிட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வாகனங்களை மதிப்பிடுவதுடன் அவைகளை நியாயமான பெறுமதியில் புத்தகங்களில் எடுத்தல். |

### 1.5.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் பதிவுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடய பதிவின் பிரகாரமான பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ)மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனியுடனான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள குளிர்பான கலவை வழங்களில் ரூபா 10.4 மில்லியன் பெறுமதியான வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | 73.1 | 62.7 | 10.4 | விபரங்களை பெற்றுக்கொள்வதில் சிரமம் காரணமாக, இவ்வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டுபிடிப்பதில் தாமதம் காணப்பட்டது மேலும், கணக்கிணக்கம் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றது. . | இது தொடர்பான உள்ளக கட்டுப்பாடு வழுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டியதுடன் கணக்கிணக்க செயற்பாடு தொடர்ச்சியாக செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனியின் இறுதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களுடன் தொடர்புபட்ட மொத்தம் ரூபா 23.8 மில்லியன் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ | | 23.8 | 23.8 | ரூபா 22.7 மில்லியன் தொகையான பட்டியல்கள், பட்டியல்களின் தவரவிடுதல் மாற்றல் கட்டளைகளின் அனுமதியில் தாமதம் காரணமாக கணக்கிடப்படவில்லை. மேலும், ரூபா 1.1 மில்லியன் தொகையான பட்டியல்கள் அதிகார சபைக்கு தொடர்பில்லாததாக மகநெகும் ஆலோசனை கம்பனிக்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது. | உள்ளக கம்பனி கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைகளை அமுல்படுத்தல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கம்பனியுடனான நடைமுறைக்கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |
| (இ) | மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனியின் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களின் ரூபா 5.31 மில்லியன் தொகை மகெநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனியுடனான நடைமுறைக்கணக்குடனான அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | - | 5.31 | 5.31 | மேலதிக சீராக்கங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உள்ளக கம்பனி கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக உள்ளக கட்டுப்பாடொன்றை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |
| (ஈ) | அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் தோன்றும் மகெநெகும வீதி நிர்மானம் மற்றும் இயற்திர கம்பனி என பெயரிடப்பட்ட நடைமுறைக் கணக்கின் பிரகாரம், மொத்தமாக ரூபா 2,612 மில்லியன் அதிகார சபையினால் கம்பனிக்கு செலுத்தவேண்டியிருந்த அதேவேளை கம்பனியின் நிதிக்கூற்றில் உள்ள அதிகார சபையின் பெயரிலுள்ள நடைமுறைக்கணக்கிற்கிடையில் ரூபா 880 மில்லியன் வேறுபாடும் காணப்பட்டது. | 2612 | 1732 | 880 | மேலும், ஒப்பீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் தாமதத்திற்கான காரணம் தகவல் தேடுதலாகும். | இது தொடர்பான உள்ளக கட்டுப்பாடு வழுவுடையதாக காணப்பட வேண்டியதுடன் கணக்கிணக்க செயற்பாடுகள் தொடர்ச்சியாக செய்யப்படல் வேண்டும். |

### 1.5.6 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பாதை சட்டத்தின் 13 ஆம் பிரிவு மற்றும் 2011 நவம்பர் 18 ஆம் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு 7 ஆகியவற்றின் பிரகாரம், நெடுஞ்சாலைகளினால் சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் அதிகார சபையின் நிதியில் செலவு வைக்கப்படும் என்பதுடன் அப்பணம் தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நோக்கத்திற்காக பயன்படுத்தல் வேண்டும் ஆனால் 2018 திசெம்பர் 31 வரை நெடுஞ்சாலை முறைமையிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 36,074 மில்லியன், ரூபா 24,379 மில்லியன் பெறுமதி மேலே கூறப்பட்ட வர்த்தமானிக்கு வெளியான செலவுகளிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2015 தொடக்கம் 2018 காலப்பகுதிக்கான இலங்கை பொலிஸ் சார்பான செலவுகள் மொத்தமாக ரூபா ரூபா. 264 மில்லியன் மேலே கூறப்பட்ட செலவினங்களிற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | திரைசேரி ஏனைய செயற்பாடுகளிற்கு முறையாக நிதியளிக்காததால் மேலே கூறப்பட்ட பணம் ஏனைய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டது. 2015 ற்கு பிறகு இறுக்கமான கட்டுப்பாட்டுடன் அதே நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் அது பொதுத்திரைசேரியின் அனுமதியுடன் சம்பள கொடுப்பனவிற்கான நிதிப்பற்றாக்குறைக்கு பயன்படுத்தப்பட்டது. பொலிஸ் பிரிவின் அதிவேகப்பாதை கடமைகள் தொடர்பாக உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னர் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படும். | அப்பணம் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடுவதாகவோ அல்லது அதிகார சபையின் நோக்கத்திற்காக பயன்படுத்துவதாகவோ இருந்தால் உரிய அதிகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குக. |

## 1.6 பெற வேண்டியவைகளும் கொடுக்க வேண்டியவைகளும்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நெடுஞ்சாலைகளிடமிருந்து பெறப்பட்ட வருமானங்களிலிருந்து திரைசேரியினால் பெறப்பட்ட ரூபா 4 மில்லியன் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அவ்விடயத்தின் மீது விளங்கியிருந்ததுடன் அத்தொகை ரூபா 4 மில்லியனை மீளப்பெற கோரிக்கை செய்யப்பட்டிருந்தது. | உரிய பணத்தினை திரும்பம் பெற பின் தொடர்க. |
| (ஆ) அதிகார சபையினால் விசேட கடன்கள் / செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு செய்யப்பட்ட முற்பணங்கள் சார்பாக திரைசேரியிடமிருந்த அதிகாரசபைக்கான ஏற்பாட்டின் பற்றாக்குறையின் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மேலதிக பெறவேண்டிய கடன் ரூபா 5,667 மில்லியன் ஆகும். | ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,667 மில்லியன் மிகுதி 2019 மே 31 இல் உள்ளவாறு ரூபா 4,467 மில்லியனாக குறைக்கப்பட்டிருந்தது. | பணத்தினை மீளப்பெறுவதற்கு அல்லது வரிசை அமைச்சு திரைசேரி மற்றும் அதிகார சபையுடன் கொள்கை உடன்படிக்கையொன்றை கொண்டுவர நடவடிக்கை எடுக்க. |

| | | |
|---|---|---|
| (இ) 2011 பாதீட்டு பரிந்துரையின் கீழ் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் 2012/13 இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டது. என்றாலும் தென்மாகாணத்தின் மாத்தற மாவட்டத்தில் செய்யப்பட்ட செயற்திட்டங்களிற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் நான்கு ஏனைய மானில நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 1,060 மில்லியனாகும். | கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்வில்லை. | உரிய பணத்தினை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மேலும் எதிர்காலத்தில் அவ்வாறான கட்டணங்கள் மீது தொடர்ச்சியாக பின்பற்றுக. |
| (ஈ) அதிகார சபையினால் வழங்கப்பட்ட இடைக்கால கடன்களின் ஒரு மிகுதித் தொகை ரூபா 1.83 மில்லியன் மேலும் திரும்பப்பெறப்படாமல் இருந்தது. | மீளப்பெறப்படாத மிகுதிகளிலிருந்து ரூபா 229,975 தொகை மீள்ப்பெறப்பட்டது. ரூபா 99,600 தொகை மீளப்பெறப்பட்டிருந்தது. | நாபன வீதிக்கோவையின் பிரகாரம் மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) வேலை ஆரம்பிப்பு முற்பணம் பல்வேறு துறைகளினால் அமுல்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 20 ஒப்பந்த வேலைகளிற்காக வழங்கப்பட்டிருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய மிகுதி கடன் ரூபா 36.23 மில்லியனாகும். | பல்வேறு ஒப்பந்தங்களிற்காக வழங்கப்பட்டிருந்த சில பிணைகளை மற்றும் பில்களை பணமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனாலும், சில பாதுகாப்பு பத்திரங்களின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | பிணைகள் மற்றும் பற்றுச்சீட்டுக்களை பணமாக்குவதிலிருந்து பணத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 07 ஆகும். மேலும் அவைகளில் வேலை ஆரம்பிப்பு முற்பணத்திலிருந்து மீளப்பெறப்பட வேண்டிய மிகுதி தொகை ரூபா 17.51 மில்லியன் ஆகும். | அம் மிகுதிகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சட்ட நடவடிக்கைகள் விரைவாக்கப்பட வேண்டியதுடன் மீளப்பெறலும் செய்யப்படல் வேண்டும். |
| (எ) 79 ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்க எதிர்பார்த்த திகதி 2018 திசெம்பர் 31 இல் தாண்டியிருந்ததுடன் அவைகளிடமிருந்து திரும்பப்பெற வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தொகை ரூபா 394.8 மில்லியன் ஆகும். இக்காலப்பகுதியிலிருந்தான முற்பணத்தொகை ரூபா 17.04 மில்லியன் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 38.17 மில்லியன் தொகை ஏனைய 15 | ஒப்பந்தம் தொடர்பான விடயங்களை பரீட்சிப்பதனூடாக கொடுக்கப்பட்ட முற்பணங்களை கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வேலை ஆரம்பிப்பு முற்பண மீதியை மீளப்பெருக. |

செயற்திட்டங்களிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 338.79 மில்லியன் தொகை 58 செயற்திட்டங்கள் தொடர்பாக மீளப்பெறப்பட வேண்டியிருந்தது.

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 03 தொடக்கம் 04 வருடங்களிற்காக என்பத்தைந்து மில்லியன், 04 தொடக்கம் 05 வருடங்களிற்காக ரூபா 57 மில்லியன் மற்றும் 05 வருடத்திற்கு மேலானதற்காக ரூபா 130 மில்லியன் வாடிக்கையாளர் வைப்புக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை காரியாலயம் மற்றும் 04 மாகாண காரியாலயங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஊழியர் வேலைகள் தொடர்பாக மிகுதியாக காணப்பட்டதுடன் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் முறையான பின்தொடரல் நடவடிக்கை இல்லாமல் வைப்புக்கள் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியடைந்தது. | வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் அவ் வைப்புக்கள் மீது ஆழமான பரிசோதனை நடாத்துவதன் மூலம் நீண்டகாலத்திற்கு மாற்றமடையாத வைப்பு மீதிகள் சார்பாக முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பூர்த்தியாக்கப்பட்ட வேலைக்காக பெறப்பட்ட வைப்புக்கள் ரூபா 92.61 மில்லியன் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவளிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. | வாடிக்கையான வைப்புக்களை காலாகாலம் மீளாய்வு செய்வதூடாக உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாட்டை வழுப்படுத்துவதுடன் அம் மீதிகளை அதிகாரசபையின் வருமானத்துடன் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) பெறப்பட்டிருந்த ரூபா 366 மில்லியன் திரும்ப பெறத்தக்கதுடன் அதிகாரசபையின் வாடிக்கையாளர் வேலைகளுடன் தொடர்பான வைப்புக்கள் மூன்று வருடங்களிற்கு மேலாக செலுத்தப்படாமல் மீதியாக காணப்பட்டது. | கணக்காய்வு வினாவின் 03 வது இனைப்பிள் காட்டப்பட்டிருந்த பெறுமதிகளில், பெறப்பட்டிருந்த தொகை ரூபா 366 மில்லியன் வாடிக்கையாளர் வேலைகள் சார்பான மீளப்பெறத்தக்க வைப்புக்களுடன் தொடர்புபட்டதாக இருந்தது. இது தொடர்பான தகவல்களை வேண்டுவதனூடாக நீண்டகால வைப்பை வருமானத்தில் செலவு வைக்க படிமுறைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | முகாமைத்துவ சம்மதத்தினூடாக செயல்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) அதிகார சபையின் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,877 மில்லியன் தொகையான பிடிகாசு 03 தொடக்கம் 04 வருடம், 04 தொடக்கம் 05 வருடம், 5 வருடங்களிற்கு மேலாக அதிகரித்ததுடன் அவற்றின் பெறுமதி முறையே ரூபா 405, ரூபா 224, ரூபா 406 மில்லியனாக இருந்தன. இருப்பினும், ஒரு தொகை ரூபா 629 மில்லியன் எந்த காரணமும் இல்லாமலும் ஒப்பந்ததாரரினால் எந்த வேண்டுகோளும் செய்யப்படாததன் காரணமாகவும் மேலும் தக்கவைக்கப்பட்டிருந்தது. | எந்த கருத்துரைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிடிகாசை மீளாய்வு செய்வதுடன் கொடுக்கப்படாதவைகளின் காரணங்களின் பிரகாரம் மீது உரிய நடவடிக்கை எடுக்குக. |

## 1.7 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் பிரிவு 26 | ஏனைய தரப்பினருடன் உடன்படிக்கை கையொப்பமிடும் முன்னர் அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அமைச்சரின் அனுமதியானது பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக இயங்குவதற்கு கணக்கெடுக்கப்படும். | சட்டத்தின் பிரிவு 26 ன் நிபந்தனைகளின் படி நடவடிக்கைகள் எடுக்குக. |
| (ஆ) 2018 ஜுன் 28 ஆம் திகதிய 2018/சீஎல்/35 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் நிர்வாக சுற்றறிக்கை. | பிரபலமான வேலைத்தளங்களில் 05 அல்லது பல வருடங்கள் பூர்த்தியாக்களை கொண்டுள்ளது மற்றும் பிரபலமற்ற முன்னைய வேலைத்தளங்களில் 3 வருடங்கள் அல்லது அதற்கு மேல் பூர்த்தியாக்களை கொண்டுள்ளது, இடமாற்றலிற்கு விண்ணப்ப ஊழயர்கள் கூட, இடமாற்றங்கள் சேவை தேவைப்பாடுகளிற்கு இணங்க செய்யப்படல் வேண்டும், ஆனால் அது அதன் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த இடமாற்றல் கொள்கை முகாமைத்துவத்தினால் முறையாக விருத்தி செய்யப்படுகின்றது. | விரைவாக இடமாற்றல் கொள்கையை நிறுவி அதன்படி செயற்படுத்துக. |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 04 | 10 மாத செயற்படுத்தல் அல்லாக்கடனின் 31 மீதிகளின் தொகை ரூபா 1.83 மில்லியன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரும்பப்பெறப்பட்டிருக்கவில்லை. | பிணையளியிடமிருந்து மீளப்பெறல்கள் செய்யப்படுவதுடன் அது தோல்வியுற்றால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனக் கோவையின் பிரிவு 04 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குக. |
| (ஈ) இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவை | | | |
| (i) எப். ஆர். 395 | ஏற்றுக்கொள்ளக்கூடிய தாமதத்துடன் வங்கி கணக்கிணங்கம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வங்கி கணக்கிணக்கம் உரிய திகதியில் தயார்க்கப்பட்டிருப்பினும், மாகாண காரியாலயத்திற்கு வங்கி கூற்று பெறப்பட்டிராததன் காரணமாக வங்கி கணக்கிணக்கம் சமர்ப்பிக்க முடியாமல் போகலாம். | ஒவ்வொரு மாதத்திற்குமான உரிய வங்கி கணக்கிணக்கங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் அரசாங்க கணக்காய்விற்க வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii)நிதிப்பிரமானக்கோவை 880 மற்றும் 881 | அப்பணம் அரசாங்க பணத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு பாதுகாப்பு வைப்பாக எடுத்துக்கொள்ளப்படவில்லை | எதிர்காலத்தில் இதற்காக ஒரு பொறிமுறையை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய முறைமையினை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பொது நிறுவன சுற்றரிக்கை பிஈடி/12 இன் பிரிவு 9.12 | பொதுநல நடவடிக்கைகளிற்காக திரைசேரி அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உத்தியோகத்தர்கள் போக்குவரத்து சேவையின் ஏற்பாட்டிற்காக அது பெறப்பட்டிருக்கவில்லை. | மேலதிக விசாரணைகள் செய்யப்படும் என்பதுடன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொதுநல நடவடிக்கைகளை பராமரிக்க திரைசேரி அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். |
| (ஊ) இலங்கை சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VI இன் பிரிவு 04 | தனிநபர் கோவைகள் ஒவ்வொரு உத்தியோகத்தரிற்கும் முழுமையாக பேணப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டுமாயினும், அவ்விதிகளின் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப அதிகார சபை தனிநபர் கோவைகளை பராமரித்திருக்கவில்லை. | இக் கோவைகள் ஏற்கனவே செயற்படுத்துவதுடன் நிறுவனத்தின் ஊழியர் கிரயம் இருக்குமாறு சில நேரங்கள் எடுக்கும். | தனிநபர் கோவைகளின் பராமரிப்பினை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 09/2009 மற்றும் 2017 இன் பாதீட்டு மும்மொழிவு இல 373 | சுற்றறிக்கையின் பிரகாரம், மேல்மாகாண பணிப்பாளர் அலுவலகம் உள்ளடங்கலாக ஏனைய மாகாண உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புரப்படல்களை பதிவு செய்ய கைரேகை இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கைரேகை இயந்திரத்தை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கைரேகை இயந்திரத்தை நிறுவுவதற்கு படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப்பெறுபேறு

வரிக்கு பின் இலாபத்தில் ரூபா 2,213 மில்லியன் தொகையான பற்றாக்குறை காணப்படுவதுடன் தொடர்புடய முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 779 மில்லியனாகவும் இருந்தது. இருப்பினும், நிதிப்பெறுபேறுகளில் மொத்தமாக ரூபா 1,434 மில்லியன் சரிவு அவதானிக்கப்பட்டது. இச் சரிவு பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தனிப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வருமானவரியின் அதிகரிப்பின் காரணத்தினாலாகும்.

### 2.2 விகிதப்பகுப்பாய்வு

| | 2018 | 2019 |
|---|---|---|
| நடைமுறைவிகிதம் | 2: 1.54 | 2: 1.14 |
| விரைவு சொத்து விகிதம் | 1: 1.52 | 1: 1.13 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை ஆண்டில் நடைமுறை விகிதம் நேரான வளர்ச்சியை பிரதிபலித்த அதேநேரம் விரைவுச் சொத்து விகிதம் கூட விரும்பத்தக்க மட்டத்தை அடைந்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ஒரு வளர்ச்சியை காட்டியது.,

இருப்பினும், இவ்விகிதங்கள் கொழும்பு - கண்டி அதிவேகப்பாதை செயற்திட்டத்திற்காக ஒரு நடைமுறை அல்லாப் பொறுப்பாக மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 12,000 மில்லியன் பெறுமதியான கடனின் மறுவகைப்படுத்தலின் பெறுபேறாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மொத்தமாக ரூபா 24.19 மில்லியன் மகெநெகும மகமதுர கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் பயன்பாட்டிற்காக ஏற்பட்ட மொத்த செலவுகளில் அமைச்சின் சார்பாக செலவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கருத்துறைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபைக்கு நேரடி நன்மைகளை தரக்கூடிய கொடுப்பனவுகள் ஒரு செலவாக அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் மற்றய ஏனைய கொடுப்பனவுகளை மீள் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை |

எடுக்கப்படல் வேண்டும்.

## 3.2 அடயாளப்படுத்தப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2017 ஆண்டின் நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு ஊழியர்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3.77 மில்லியனிற்கு ஆயிரத்தி முன்னூறு காலனிகள் வழங்கப்பட்டது. இருப்பினும் வழங்குனரினால் வழங்கப்பட்ட 734 சோடி காலணிகள் வழங்கப்பட்ட விபரக்குறிப்பிற்கு மாறாக காணப்பட்டதுடன் அவைகள் தொழிநுட்ப மீளாய்வுக்குழுவினால் நிராகரிக்கப்படவில்லை, மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கொள்முதல் நடைமுறையில் இவ்வாறான பலவீனங்கள் இல்லாதிருக்க அலுவலர்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்குனர்களிற்கு அவைகளை திருப்பி அனுப்புவதன் மூலம் தரம் குறைந்த காலணிகளை சரிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | விபரக்குறிப்பினை மீறும் வழங்கல்களை நிராகரிக்க வேண்டியதுடன் விபரக்குறிப்பை திருப்திப்படுத்தவில்லையாயின் பணம் செலுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) விடுமுறை கொடுப்பனவை பெறுவதற்காகவும் முறையான அனுமதி இல்லாமல் அதிகார சபையின் வாகனத்தை தவராக பயன்படுத்த அதிகாரசபையின் நெடுஞ்சாலைகள் செயற்பாடுகள்இ பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் வேலை செய்யும் பெண் உத்தியோகத்தர்களிற்கு சாதாரண வேலை நாட்களிற்கு மேலான எரிபொருளிற்கான கொடுப்பனவு என்பவற்றிற்காக ரூபா 116,166 மில்லியன் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவிக்கவில்லை. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு எதிராக உரிய ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்குக. |
| (இ) வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்காக நிர்மானிக்கப்பட்ட கட்டிடத்தின் 252,055 சதுர அடியில் 72,400 சதுரஅடி வரிசை அமைச்சினால் பயன்படுத்தப்படுவதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சில பிரிவுகள் செஸ்திரிபாய கட்டிடத்தில் 16,250 சதுர அடியில் செயற்படுகின்றதுடன் அதிகாரசபை ரூபா 33.5 மில்லியன் வாடகையாக செலுத்தியிருக்க வேண்டும். | இது தொடர்பான கருத்துக்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பணம் வரிசை அமைச்சினால் மீள்திருப்பப்படல் வேண்டும். |

## 3.3 இயலாமைகள்

------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் ஒப்பந்தம் ஒன்றிற்குள் உள்ளாகும் போது பின்வருவன அவதானிக்கப்பட்டன அவைகள் சில வெளிநபர்களினால் அதிகாரசபைகளிடையில் உள்ளான அதிகார சபையின் பிரதான உணவுசாலை மற்றும் ஒப்பந்தங்கள் ஒப்பந்த திகதி குறிப்பிடப்படாமல் வாடகைக்குவிடல், சட்ட ஆளுமையின் அலட்சியம், ஒப்பந்தங்களை தயாரிப்பதில் அதிகார சபையின் சட்டப்பிரிவிடமிருந்து உதவி பெறப்படாமை, மாதாந்த வாடகை செலுத்தப்படாத போது நடவடிக்கைகள் குறிப்பிடப்படாமை, ஒப்பந்த ரீதியான கடமைகளை கொண்டிராத நபர்கள், அதிகார சபை சார்பாக ஒப்பந்தம் ஒன்றிற்குள் உள்ளாகுதல். | எதிர்காலத்தில் காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்படும். | அதிகார சபைக்கு உச்ச நன்மையை பெறக்கூடிய வகையில் ஒப்பந்தத்திற்குள் உள்ளாகுவதுடன் தேவையான தொழில்சார் உதவிகளை பெறல். |
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுஞ்சாலை பராமரிப்பு முகாமை பிரிவில் வேலை செய்யும் காசாளரும் இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் நிதிப்பிரமான கோவையின் எப்.ஆர் 880 இன் பிரகாரம் பாதுகாப்பு வைப்பொன்றை வைத்திருக்க வேண்டியிருப்பினும், அவ்வாறான வைப்பு வைத்திருக்கப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | ஏப்.ஆர் 880 ற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) அதிகார சபையின் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்தான கழிப்பனவுகளை உள்ளடக்கிய சுய வாழ்கை காப்புறுதி நிதியத்தினால் செய்யப்பட்டிருந்த ரூபா 197.3 மில்லியன் தொகையான முதலீடுகள் அதிகார சபையின் முதலீடு ஒன்றாக காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் சுயவாழ்க்கை காப்புறுதி ஒரு சட்ட நபராக கருத்தில் கொள்ளப்படாததுடன் அது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் முதலிடப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பாக முறையான செயன்முறை ஏற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒரு தனியான பிரிவாக நடாத்துவதனூடாக தேவையான கட்டமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) பொரல்ல சுரங்கப்பாதையிலுள்ள 01 மற்றும் 02 ஆம் இலக்க கடைகளின் மாதாந்த வாடகை கொடுப்பனவு குத்தகைதாரரினால் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் பணம் மற்றும் அக்கடைகளின் தெளிவான உரிமைத்துவத்தின் கடமையை அதிகார சபை திரும்பப் பெறாமல் இருந்தது. | நிலுவையை தீர்ப்பதற்கும் கடைகளிலிருந்து தொடர்புபட்ட நபர்களை விளக்குவதற்கான அறிவிப்பை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. | தொடர்புடைய சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிபந்தனைகள் மீட்டெலாமல் இருப்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு இயலாமைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அதிகார சபையினால் உடமையாக்கப்பட்ட வீதி ஒதுக்கீடுகள் மற்றும் காணிகளினை வாடகைக்கு விடுவது தொடர்பாக, அதிகார சபை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வரிசை அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் குத்தகை காணி மற்றும் ஆதனம் தொடர்பாக முறையான ஒப்பந்தம் ஒன்று செய்திருக்கவில்லை. மேலும், 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய வீதி வழி சட்டத்தின் பிரிவு 6 ன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வாடகை பெறுமதியை தீர்மாணிக்க அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நடை முறைகளுடன் உடன்பாடு. எதிர்காலத்தில் சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கபடும். | ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கும் அதிகார சபையினால் உரிமையாக்கப்பட்ட வீதி ஒதுக்கீடுகள் தொடர்பான 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் பிரகாரம் செயற்படவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,771 மில்லியன் தொகையான வாடிக்கையான வைப்பொன்று காணப்பட்டது. கோரிக்கை இடப்பட்ட நேரம் தொடக்கம் பொது அல்லது தனியார் பிரிவினால் இவ்வேலைகள் முடிக்கும் வரை முறையான செயன்முறை ஒன்று செய்திருக்கப்படவில்லை. | மீளாய்வாண்டில் கணக்காய்வு வினா இல 1.1.1, 1.1.2 மற்றும் 1.1.4 வில் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகார சபைக்கு சாத்தியமில்லாத போதும், முறையான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை தயாரித்து அமுல்படுத்த படிமுறைகள் எடுக்கப்படும். | இச்செயன்முறைகள் முறையான உள்ளகக்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2006 அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.8 இன் பிரகாரம், அவசர பெறுகை திட்டம் மனிதனால் அல்லது இயற்கை அனர்த்தத்தின் காரணமாக, அல்லது பெறுகைக்கு அவசரமான தேவை இருக்கும் போது மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் பெறுகை தீர்மாணிக்கப்பட பயன்படுத்த முடியும். ஆனால், அதிகார சபை அவசரமான பெறுகை விடயமாக ஐந்து மாகாணங்களின் வீதி அடையாளமிடலிற்காக ரூபா 187.96 மில்லியன் பெறுமதியான வீதி அடயாளங்கள் மூலப்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | வெள்ளை வெந்நெகிழி வண்ணத்திற்கு தேவையானவை நடைபாதை வெண்மையாக்கள் கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், விலைமனுக்கள் 2018 ஜூலை 06 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தினூடாக தேசிய போட்டி விலைமனுவின் கீழு நாட்டின் எல்லா மாகாணங்களிலிருந்தும் கோரப்பட்டிருந்தது. அமைச்சின் பெறுகை குழுவின் கீழ் ஐந்து மாகாணங்களின் தேவையான மூலப்பொருளை கொள்வனவு செய்வதற்கு ஒரு தனி ஒப்பந்தமாக வழங்கப்படும் போது அது பெறுகைக்காக அதிக நேரத்தை எடுக்கும். | அவசர பெறுகை நடைமுறை வழிகாட்டலின் பிரிவு 3.8 இன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட வேண்டியதுடன் பொதுப்பெறுகை அப்போது தேவைப்படுவதன் கீழானதுடன் கையாளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பெறுகை நடவடிக்கைகளை செயற்படுத்த பெறுகை பிரிவொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் நிர்மானப்பராமரிப்பு முகாமைத்துவம், நெடுஞ்சாலை செயற்பாடு முகாமைத்துவம் போன்ற பெறுகை நடவடிக்கைகள் அதிகார சபையின் பராமரிப்பு பிரிவினால் வேறாக செய்யப்படுகிறது. அதன் பெறுபேறாக, அதிகார சபையின் பெறுகை நடைமுறையில் சீரான தன்மை இல்லாததுடன் பெறுகையிலிருந்து உச்ச பொருளாதார நன்மைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு முகாமைத்துவ பிரிவின் அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் இப்பிரிவினால் கையாளப்படுகின்றன. தலைவரின் மற்றும் உள்ளக கணக்காய்வு பணிப்பாளரின் அறிவுரையின் பிரகாரம், பொருட்களை வழங்குவதற்கு பெறுகை பிரிவே பொறுப்பாக இருக்கும் என எதிர்காலத்தில் அறிவிக்கப்படும். | பெறுகையிலிருந்து உச்ச அளவான நன்மையினை பெற்றுக்கொள்ளும் முகமாக பெறுகையை முடிந்தளவு மத்தியப்படுத்த வேண்டும். |
| (இ) அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.3.13 (1) இன் பிரகாரம் விலைமனுக்கான உத்தரவாதம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தம் பெறுமதியில் 1 சதவீதம் வரையான மொத்த தொகை கொடுப்பனவாக சான்றிதலின் ஒரு படிமத்தில் செய்யப்படும். | கருத்துரை இல்லை. | உத்தரவாத பாதுகாப்பு பத்திர வழிகாட்டியின் 5.3.13 இன் பிரகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். |
| (ஈ) பெறுகை குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வு குழு ஆகியன அரச பெறுகை வழிகாட்டியின் 2.4 இன் பிரகாரம் பெறுகை செயற்பாட்டிற்கு பொறுப்பாகும். இருப்பினும் விபரணங்கள், பெறுகை ஆவணங்கள் மற்றும் அனுமதி ஆகியவற்றினை மீளாய்வு செய்யும் கடமை பத்திகை விளம்பரம் வெளியிடப்பட்டதன் பின்னர் நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவினால் செய்திருக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்துரை இல்லை. | வழிகாட்டியின் 2.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி பெறுகை நடவடிக்கைகள் மீது தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் ஆதரவு / உதவி பெறப்பட்டிருக்க வேண்டும். |
| (உ) ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நேரத்தின் மீது செய்யப்பட்ட கால நீடிப்பின் நிகழ்வின் மீது, நிறுவனமானது பெறுகை கையேட்டின் உபகூறு 5.4.8 இன் பிரகாரம் செயன்முறை பாதுகாப்பினை நீடிக்க ஒப்பந்ததாரரிடம் கேட்க வேண்டும். இருப்பினும், அப்பாணியில் பாதுகாப்புக்கள் நீடிக்கப்பட்டிருக்கவில்லை போன்ற நிகழ்வுகள் காணப்பட்டன. | கருத்துரை இல்லை. | தொடர்புடய வழிகாட்டிகளின் 5.4.8 ன் பிரகாரம் செயற்பாட்டு உத்தரவாதத்தின் காலத்தினை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.2 ன் பிரகாரம் ஒவ்வொரு படிமுறையின் ஆரம்பம் தொடர்கம் பூர்த்திவரை விபரமாக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருப்பினும், அப் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | பெறுகை திட்டத்தின் தயாரிப்பு பெறுகை வழிகாட்டியின் 4.2.2 வின் பிரகாரம் அமைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) பெறுகை வழிகாட்டியின் பிரிவு 2.14.1 இல் கூறப்பட்ட அதிகார சபையின் வரையறையின் அரச மூலதன பங்களிப்பிற்கான பெறுகையின் பிராந்திய குழுவிற்கான உச்ச வரப்பு ரூபா 10 மில்லியனாக இருப்பினும், இவ்வரையறைக்கு அப்பால் காணப்பட்ட 10 பெறுகைகள் நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவினால் செய்யப்பட்டிருந்தன. | கருத்துரை இல்லை. | பெறுகை வழிகாட்டியுடன் உடன்படல் வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| குறைபாடுகளினை திருத்தியமைக்காததன் காரணமாக ரூபா 5,224,779 தொகை ஒப்பந்தங்களின் சார்பாக தக்கவைத்திருந்ததுடன் அவை ஆறு வருடங்களிற்கு மேலாக தக்கவைக்கப்பட்டிருந்தது. ஆனால் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | முறையாக ஒப்பந்தங்களை வைத்திருப்பதன் மீது சரிசெய்தலை செய்திராத ஒப்பந்ததாரர்களை கறுப்பு பட்டியலிட நடவடிக்கை எடுக்க வேணடியதுடன் அவர்களின் விலை மனுக்கள் எதிர்கால பெறுகையின் போது கவனத்தில் எடுக்கக்கூடாது. |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகாரசபை ஆட்சேர்பிற்காக ஒரு புதிய திட்டத்தினை தயாரித்து அனுமதித்திருக்கவில்லை. | அனுமதியினை பெற்றுக்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபையின் அனைத்து பதவிகளிற்கும் பொருத்தமான ஆட்சேர்ப்பு செயன்முறையை விரைவாக அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிர்வாகப்பிரிவில் 2017 ஜூலை 20 முதல் பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடம் காணப்பட்டது அது அதிகார சபையின் பிரதான பாகமாக காணப்படுகின்றன. | ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிர்வாகப்பிரிவில் உள்ள பதவிவெற்றிடங்கள் நிரந்தர உத்தியோகத்தர்களுடாக முறையாக நிரப்பப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) அதிகார சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியனியின் 597 பொறியியலாளர்களில் 174 பேர் பல்வேறு செயற்திட்டங்களிற்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக, வீதி பராமரிப்பு தொடர்பாக நிறைவேற்று பொறியியலாளர் மற்றும் தலைமை பொறியியல் உத்தியோகத்தர் ஆகிய கவனிக்கத்தக்க வெற்றிடங்கள் காணப்பட்டன. | அவர்கள் செயற்திட்ட தேவைப்பட்டிற்கு இணங்க விடுவிக்கப்பட்டிருந்தனர். | விடுவிப்பு அது முகாமை செய்யப்பட முடியுமாக இருந்தால் மாத்திரமே செய்யப்பட வேண்டியதுடன் அது அதிகார சபையின் விரிவாக்கம் மற்றும் பராமரிப்பினை தாமதப்படுத்தியிருக்கவில்லை. |

## 4. பொறுப்பு கூறக்கூடிய தன்மை மற்றும் நன்நடத்தை.

### 4.1 வருடாந்த செயன்முறைத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 மே 30 ஆம் திகதிய பொதுநிறுவன சுற்றறிக்கை பிஈடி/12/2003 இன் பிரகாரம் செயன்முறைத்திட்டம் அதிகாரசபையின் அனைத்தும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டதாக தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும் நிர்வாக திட்டமிடல் ஆராய்ச்சி அபிவிருத்தி காணி மற்றும் இயந்திரவியல் பிரிவு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட செயன்முறைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயன்முறைத்திட்டம் எல்லா எதிர்பார்ப்புக்களையும் கொண்டதாக தயார்க்கப்படல் வேண்டும். |

### 4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கணக்கீடு, பாதிடல், பராமரிப்பு, பொதுமக்கள் முறையீடுகள், தனிப்பட்ட முகாமைத்தும் மற்றும் பல போன்ற ஒருங்கிணைந்த தகவல் முறைமை அதிகார சபையின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒரு தகவல் முறைமை உத்தேசமாக அறிமுகப்படுத்துக. | அதிகாரசபையானது அமைப்பின் பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களை இணைக்க கூடிய வசதிகளை கொண்ட தொடர்பாடலையுடைய ஒருங்கிணைந்த தகவல் முறைமை ஒன்றை கொண்டிருக்க வேண்டும். |

## 4.3 நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (m) இது தொடர்பாக தேசிய கட்டிட அராய்ச்சி அமைப்பு, நகர அபிவிருத்தி அதிகார சபை, நிலை பேன் தகு அபிவிருத்தி அமைச்சு, வன மற்றும் பிராந்திய அபிவிருத்தி மற்றும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சு போன்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒத்துழைக்க வேண்டிய தரப்பினர்கள் பொதுமான மட்டத்தில் இருக்கவில்லை. | மேலும், வரிசை அமைச்சுடனான நேரடி ஈடுபாட்டுடன் இது தொடர்பாக அறிவிக்க குறித்து வைக்கப்பட்டுள்ளது. | தொடர்புடய முகவர்களுடன் நெருங்கிய வேலைத் தொடர்பினை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ஒரு பணியின் செயலாற்றலினை மதிப்பிடுவதற்கு ஒரு சரியான தரவு தளத்தினை கொன்டிருக்க வேன்டிய தேவை கானப்படினும், அதிகார சபை நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கு சரியான தரவுதளத்திற்காக வேலை செய்திருக்கவில்லை. | மேலும், வரிசை அமைச்சுடனான நேரடி ஈடுபாட்டுடன் இது தொடர்பாக அறிவிக்க குறித்து வைக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் குறிகாட்டிகள் அதிகாரசபையின் அனைத்து செயற்பாட்டு எதிர்பார்ப்புக்களிற்காகவும் அடயாளப்படுத்தப்பட வேண்டியதுடன் அவைகளை அளவிடவும் மதிப்பிடவும் ஒரு தரவுத்தளத்தை உருவாக்க வேண்டும். |
| (இ) நிலைபேண்தகு இலக்ககளை அடைந்து கொள்வதற்காக அதிகார சபையினால் அடயாளப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் வருடாந்த திட்டத்தில் உள்ளாக்கப்பட்டதுடன் அப்பணிகளை முடிக்க தேவையான நிதி ஏற்பாடுகள் வருட பதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருட திட்டத்தில் ஏற்கனவே அடயாளப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கும் வருட பாதீட்டில் ஏற்பாடுகள் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அடயாளப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படல் வேண்டும். |